LIBRARY
31 DEC 2003
Eastern University, Sri Lanka

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## FIRST EXAMINATION IN DIPLOMA IN BUSINESS ADMINISTRATION/ MARKETING MANAGEMENT – 1999/ 2000 (REPEAT) (2003 Nov.)

## DIPLOMA PROGRAMME - EXTERNAL

## DBA 104 ORGANIZATIONAL BEHAVIOUR

ஏதாவது ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. தங்களின் பணியின் போது முகாமையாளர்கள் என்ன புரிகின்றனர் என்பதை அறிவதற்காக ஹென்றி மின்ற்ஸ்பேர்க் ஆய்வு ஒன்றை மேற்கொண்டார். இவரது ஆய்வின்படி முகாமையாளர்கள் பத்து வகையான வேறுபட்ட ஆனால் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட பாங்குகளை அல்லது நடத்தைகளை கொண்டுள்ளதாக அறிந்தார்.

    a. இப்பத்து பாங்குகளையும் மூன்று வகைக்குள் உட்படுத்த முடியும். இவை யாவை?

    (03 புள்ளிகள்)

    b. பத்துப் பாங்குகளையும் பட்டியலிட்டு ஒவ்வொன்றிற்கும் உதாரணம் தந்து விளக்குக.

    (10 புள்ளிகள்)

    c. இந்தப் பாங்குகள் ஒவ்வொன்றும் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுக் காணப்படுகின்றது என்பதைக் காட்டுக.

    (07 புள்ளிகள்)

    (மொத்தம் 20 புள்ளிகள்)

02. வ்.்ரெட் லூதான்ஸ் (Fred Luthans) அவர்களும் உதவியாளர்களும் முகாமையாளர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை வேறுபட்ட கோணத்தில் நோக்கி, பின்வரும் பெறுபேறுகளைப் பெற்றனர்.

| முகாமை செயற்பாடுகள் | சராசரி முகாமையளார் | வெற்றிகரமான முகாமையளார் | சிறந்த முகாமையளார் |
|---|---|---|---|
| பாரம்பரிய முகாமைத்துவம் | 32% | 13% | 19% |
| தொடர்பாடல் | 29 | 28 | 44 |
| மனிதவள முகாமை | 20 | 11 | 26 |
| வலைப்பின்னல் தொடர்பு | 19 | 48 | 11 |

a. மேலே காட்டப்பட்ட முகாமைத்துவ செயற்பாடுகள் ஒவ்வொன்றையும் விளக்குக. (08 புள்ளிகள்)

b. ஓர் சிறந்த முகாமையாளரை வெற்றிகரமான முகாமையாளரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுக.

(04 புள்ளிகள்)

c. மேலே தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி முகாமையாளர் ஒருவரின்

i. வெற்றிக்கும்

ii. சிறந்த தன்மைக்கும்

பங்களிப்பு செய்துள்ள காரணிகளை விளக்குக. ஓர் ஒப்பீட்டு ஆய்வை தருக. (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

a. நிறுவன நடத்தை (Organisational Behaviour) என்பதனை வரைவிலக்கணப் படுத்துக.

(04 புள்ளிகள்)

b. நிறுவன நடத்தை பற்றிய கற்றல் நடைமுறையில் உள்ள வியாபார உலகில் போட்டியாளரைவிட முன்நிற்க எந்த வகையில் உதவக்கூடும் என்பதனை விளக்குக.

(10 புள்ளிகள்)

c. நிறுவன நடத்தை கல்வியானது எதிர்கொள்ளும் சவால்கள் பற்றியும் வாய்ப்புக்கள் பற்றியும் கலந்துரையாடுக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

நிறுவன நடத்தை பற்றிய கற்கையானது சார்பு மாறிக்கும் சாரா மாறிக்கும் இடையேயான காரண காரிய தொடர்பைக் காட்டும் பொது மாதிரி (Model) ஒன்றினையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

a. தனியாள் மட்டத்தில் நிறுவன நடத்தை கற்கையில் பயன்படுத்தப்பட்ட சார்பு மாறிகளும், சாரா மாறிகளும் யாவை?

(06 புள்ளிகள்)

b. தெளிவான விளக்கம் ஒன்றை வெளிக்கொணரும் வகையில் இவை ஒவ்வொன்றையும் விளக்குக.

(10 புள்ளிகள்)

c. தனியாள் மட்டத்தில் இம்மாறிகளுக்கிடையேயான தொடர்பை காட்டும் விளக்கப்படத்தை தருக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

LIBRARY
31 DEC 2003
Eastern University, Sri Lanka

05. a. உயிர்சார் பண்புகள் (Biographical Characteristics) என்பதனால் நீங்கள் விளங்கிக்கொள்வது யாது?

(04 புள்ளிகள்)

b. உயிர்சார் பண்புகளின் பட்டியல் ஒன்றைத் தருக.

(08 புள்ளிகள்)

c. இப்பண்புகள் ஒவ்வொன்றையும் உற்பத்தித்திறன், தொழில்திருப்தி. ஊழியபுரள்வு ஆகியவற்றுடன் தனித்தனியாக தொடர்புபடுத்திக் காட்டுக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

06. a. ஆளுமை என்றால் என்ன?

(06 புள்ளிகள்)

b. ஆளுமையை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?

(06 புள்ளிகள்)

c. மேற்படி காரணிகள் ஆளுமை விருத்திக்கு எவ்வாறு பங்களிக்கும் என்பதனை உதாரணம் தந்து தெளிவுபடுத்துக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

07. a. ஆளுமை குணங்கள் (Personality Traits) என்றால் என்ன?

(04 புள்ளிகள்)

b. நிறுவன நடத்தை ஆய்வாளர்களினால் அடையாளம் காணப்பட்ட பிரதான ஆளுமை குணங்களை பட்டியலிட்டுக் காட்டுக.

(10 புள்ளிகள்)

c. நிறுவனமொன்றிற்கு ஆட்சேர்க்கும் போது இவ் ஆளுமை குணங்கள் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

08. நிறுவனத்தில் நடத்தையை எதிர்வுகூறுவதற்கு பொருத்தப்பாட்டினை கொண்டுள்ளதாகப் பல எண்ணிக்கையான ஆளுமை குறிப்புக்கள் (Personality Attributes) அடையாளம் காணப்பட்டுள்ளன.

a. நிறுவன நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் பிரதான ஆளுமைக் குறிப்புக்களை அடையாளம் காண்க.

(06 புள்ளிகள்)

b. இவற்றைப் பயன்படுத்தி நடத்தையை எவ்வாறு எதிர்வு கூறமுடியும் என்பதனை உதாரணம் தந்து விளக்குக.

(14 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)